1990 மே 12]

டாக்டர் அம்பேத்கார் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாகத் தயாரித்தல்.

* கு. கா. வினா 10308—திரு. இளம்வழுதி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தீண்டாமை, சாதிக் கொடுமைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடிய சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை, அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில் திரைப்படமாகத் தயாரித்து அனைத்து திரையரங்குகளிலும் வெளியிடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாகத் தயாரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளை அரசு பரிசீலிக்கும்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும் என்பதைப்போல்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு ஒலிவாங்கியைத் தட்ட வேண்டியதில்லை, (சிரிப்பு)

திரு. இளம்வழுதி : என்பது வேத வாக்கு. ஆனால் தட்டாமலேயே திறக்கப்படுகின்ற அற்புதம், கேட்காமலேயே கொடுக்கப்படுகின்ற அதிசயம், தேடாமலேயே கிடைக்கின்ற ஆனந்தம் எங்கள் தலைவர் தலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. டாக்டர் அம்பேத்கார் பெயரிலே மாவட்டம், அம்பேத்கார் பெயரிலே சென்னை சட்டக் கல்லூரி, அம்பேத்கார் முழு உருவச் சிலை திறந்து வைக்கப்படும் என்கின்ற அளவில் அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டதை செய்து விட்டார். அதேபோல் தபால் தலையும் ஒரு ரூபாயிலே அம்பேத்கார் உருவப் படமும் பொறித்து வெளியிட வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி இருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை உரிமையோடு கேட்கிறேன். டாக்டர் அம்பேத்காருடைய நூற்றாண்டு விழாவையும், பாவேந்தர் பாரதிதாசனுடைய நூற்றாண்டு விழாவையும் முன்னிட்டு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய பெயரையும், சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திற்கு பாவேந்தர் பாரதி

தாசன் அவர்களுடைய பெயரையும் இட மத்திய அரசை அமைச்சரவர்கள் வற்புறுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டில் ஒன்று என்னுடைய தொகுதியில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10–05 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்கள் இங்கே அவருடைய வாழ்க்கை வரலாற்றை சினிமாப் படமாக தயாரிக்கக் கூடிய சாத்தியக்கூறு இருக்கிறதா என்ற கேள்வியைக் கேட்டிருந்தார்கள். இன்றைக்கு டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பற்றிய படம் ஒன்றை தனியார் தயாரிப்பாளர் ராஜாமணி என்பவரிடமிருந்து பெற்று அது காண்பிக்கப்பட்டது. மேலும் அதை நல்லமுறையிலே எடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்களைக் கலந்து அதைப் பற்றி பிறகு பதில் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1—

குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு மின் இணைப்பு

வினா 369—திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் வட்டம் மாதையன் குட்டையில் உள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மாதையன்குட்டை (எச்) குடிநீர்த் திட்டம் மின் இணைப்பு பெறப்பட்டு 2–3–1989 அன்று பயனுக்கு கொண்டு வரப்பட்டது. மேற்படி திட்டம் 20–3–1989 அன்று ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டது.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS